# உன்னை பெற்றவள் மகிழுவாள். நீதி 23 : 25

**தகப்பன் மிகவும் களிகூறுவான்**

என்னுடைய தாய் என்னைக் குறித்து, மிகவும் கவலைப்படுகிறார்களே என்று மனம் நொந்து போன சகோதரியே,

**இந்த ஆம் ஆண்டிலே, "உன்னப் பெற்றவள் மகிழுவாள்"**

என்னுடைய தகப்பன் என்னைக் குறித்து சோர்ந்து போயிருக்கிறாரே என்று உள்ளம் உடைந்து போன சகோதரனே,

**இந்த ஆண்டில், உன்னுடைய, "தகப்பன் மிகவும் களிகூறுவான்"**

சாலமோனின் நீதிமொழிகளையே இந்த மாத வாக்குத்தத்தமாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

தேவரீர் எங்களை சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்டவருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்சியாக்கும் என்பதாக வேண்டுதல் செய்து கொண்டிருக்கும் கர்த்தருடைய பிள்ளையே,

**ஏசாயா 60 : 15 கூறுகிறது. "உன்னை மகிழ்ச்சியாகவும் வைப்பேன்"** என்பதாக

**செப்பனியா 3:17 கூறுகிறது.** உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்.

அவர் வல்லமையுள்ளவர். அவர் இரட்சிப்பார்.
அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து,
தம்முடைய அன்பின் நிமித்தம் அமர்ந்திருப்பார்,
அவர் உன் பேரில் கெம்பீரமாய் களிகூறுவார்–என்பதாக.

**இந்த ஆண்டிலே பலர் உன்னைக் குறித்து மகிழுவார்கள்**

1. உன்னைப் பெற்றவள் மகிழுவாள்
2. தகப்பன் மிகவும் களிகூறுவான்
3. உன் தேவனாகிய கர்த்தர், உன் பேரில் கெம்பீரமாய் களிகூறுவார்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

இந்த மாதத்தை ஆரம்பிக்கிறீர்கள், இந்த நன்னாளிலே இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் 3 யோவான் 4–ம் வசனத்திலே சொல்லுகிற ஒரு வாக்கியத்தை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன்.

**"என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள், என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும், அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை"**–என்பதாக.

ஆம், வாலிப தங்கையே, தம்பியே

இந்த ஆண்டிலே நீ சத்தியத்தலே நடக்க வேண்டும்.

**பிலாத்து இயேசுவைப் பார்த்து கேட்டான்,**

**யோவான் 18 : 38** சத்தியமாவது என்ன ?–என்பதாக

**யோவான் 14 : 6** இயேசு சொன்னார்:

**"நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்"**

என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.–என்பதாக.

**யோவான் 8 : 32 ல் இயேசு சொன்னார்**

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

நீ சத்தியத்தை அறிய வேண்டும் . சத்தியத்தின் படி நடக்க வேண்டும். அப்பொழுது "உன்னைப் பெற்றவள் மகிழுவாள்." தகப்பன் மிகவும் களிகூறுவான். உன் தேவனாகிய கர்த்தர் உன் பேரில் கெம்பீரமாய் களிகூறுவார். உன் ஆவிக்குரிய தாய் தகப்பன் களிகூறுவார்கள்.

**வெளிப்படுத்தல் 1 : 3 கூறுகிறது.** இந்த தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும், கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்.

அன்பு சகோதரனே, சகோதரியே

வேத வசனத்தை வாசி, கேள், கைக்கொள்.

**பிரசங்கி 12 : 13 சொல்லுகிறது.** காரியத்தின் கடைத்தொகையை கேட்போமாக. தேவனுக்குப்பயந்து, அவர் கற்பனைகளை கைக்கொள். எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே – என்பதாக கைக்கொள்வாயா ?

**உன்னைப் பெற்றவள் மகிழுவாள், தகப்பன் மிகவும் களிகூறுவான். ஆசீர்வாதம் உன்னை தேடிவரும்.**

**ஆமென்.**